**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.142/மா/2025

நாள் 14.07.2025

| | |
|---|---|
| திரு. M.K. கார்த்திக் பாபு<br>மதுரை | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையாளர்<br>மதுரை மாநகராட்சி | எதிர் மனுதாரர் |

மதுரை, தவிட்டுசந்தை, செலுக்கா சுப்பையர் சந்து, எண் 23/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.K. கார்த்திக் பாபு என்பவரின் 20.03.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 21.03.2025 அன்று பெறப்பட்டு 142/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, தவிட்டுசந்தை, செலுக்கா சுப்பையர் சந்து, எண் 23/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.K. கார்த்திக் பாபு தனது 20.03.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "நான் மதுரை மாநகராட்சியில் 2019ம் ஆண்டு Registered Engineer Grade-3 (MCRE3002) ஆக பதிவு செய்து இருந்தேன். என்னுடைய பதிவானது 03.04.2024 வரை இருந்தது. இம்மனுவில் 1வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன்.
>
> எனவே எனது பதிவை புதுப்பிப்பதற்காக https://tnurbanepay.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் மூலமாக மதுரை மாநகராட்சிக்கு Renewal Registration of Professionals / Developers என்ற கணக்கு தலைப்பில் 30.03.2024 அன்றே ரூபாய் 5000/– (ஐயாயிரம் மட்டும்) கட்டியுள்ளேன். இதன் Service Request Number 115/CP/2023-2024/0188644 ஆகும். இம்மனுவில் 2வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன்.
>
> என்னுடைய Service Request Number 115/CP/2023-2024/0188644 ஆகும். இது நாள் (19.03.25) வரை எனக்கு Registered Engineer Grade-3 (MCRE3002)ஐ புதுப்பித்து தரவில்லை. இணையதளத்தில் Received Creation Pending by TPI எனவும், Current Owner 9931788-SATHISKUMAR P என உள்ளது. இம்மனுவில் 3வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன். எனக்கு எந்தவித காரணமும் இது வரை தெரிவிக்கப்படவில்லை. இது சம்பந்தமாக 01.06.2024 அன்று மதுரை

மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு Registered Engineer Grade-3 (MCRE3002) புதுப்பித்து தர மனு அனுப்பி இருந்தேன். 01.07.2024 அன்று நகர திட்டமிடுநர் அவர்களுக்கும் மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு மனு அனுப்பி இருந்தேன். இம்மனுவில் 4, 5வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன். 05.08.2024 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரக ஆணையர், சென்னை அவர்களுக்கும் மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு மனு அனுப்பி இருந்தேன். இம் மனுவில் 6,7வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன். 11.02.2025 அன்று மீண்டும் ஒரு முறை மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு மனு அனுப்பி இருந்தேன். 17.02.2025 அன்று மதுரை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மக்கள் குறைதீர்க்கும் பிரிவில் மனு செய்து மனு பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் சீட்டு (Acknowledgement of receipt) வழங்கி உள்ளனர். இம்மனுவில் 8வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன். 14.03.2025 தேதியிட்ட நகர திட்டமிடுநர், மதுரை மாநகராட்சி அவர்கள் அனுப்பி உள்ள கடிதத்தில் Service Request Current Owner குறித்த கலம் இல்லை என தகவல் கொடுத்துள்ளார். இது முற்றிலும் தவறானது. இதற்கு ஆதாரமாக நகராட்சி நிர்வாக ஆணையரக இணைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த நகல் இம் மனுவில் 9, 10வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன். புதியதாக பதிவேற்றம் செய்யச் சொல்லி கடிதம் அனுப்பி உள்ளது. காலதாமதத்தை ஏற்படுத்தும் நோக்கம் மற்றும் மேலும் பொருட்செலவு ஏற்படுத்த முயற்சிப்பதாகவே கருதுகிறேன். மீண்டும் Rs.5,000/- கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். என்னுடைய மனு மீது பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் தமிழக அரசு ஆணை (நிலை) எண்.99 நாள் 21.09.2015ன்படி மூன்று தினங்களுக்குள் எனது மனு பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை ரசீது வழங்காமலும் 30 நாட்களுக்குள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமலும் மனுவை இறுதி செய்வதற்கான நீட்டிக்கப்பட்ட காரணங்கள் குறித்த எந்த ஒரு எழுத்துப்பூர்வமாக கடிதம் எதுவும் அனுப்பாமலும் 14.03.2025 தேதி வரை வேண்டுமென்றே தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்துவதாக நான் உணர்கின்றேன். நல்லுள்ளம் படைத்த கற்றறிந்த சமூக ஆர்வலர் சிலரின் ஆலோசனையின் பெயரில் எனது 01.07.2024 அன்று மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும் 05.08.2024 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பிய மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை குறித்து தகவல் உரிமைச் சட்டத்தில் மனு செய்த போதும் எனக்கு எந்த ஒரு பதிலும் அனுப்பவில்லை. எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் சமூகம் அவர்கள் இம்மனுவை கருணையோடு ஏற்று ஆவணங்களை பரிசீலனை செய்து எனக்கு ரிஜிஸ்டர் இன்ஜினியர் தரம் 3 (Registered Engineer Grade 3) புதுப்பித்து தர உத்திரவிடுமாறும், விண்ணப்பித்த நாள் முதல் சுமார் 350 நாட்கள் கடந்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள Current Owner 9931788 -சதீஷ்குமார் பி என்கிற ஊழியர் / அதிகாரியின் மீதும் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர் / அதிகாரியின் உயர் அதிகாரிகளையும், சீர்கேடான நிர்வாகத்தை நடத்தி வரும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை அழைத்து விசாரணை செய்து தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல் முறையீடு) விதிகளின்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு பொருந்தும் சிறிய தண்டனைகள் வழங்க பரிந்துரை செய்யுமாறும், முறை மன்ற நடுவர் அவர்கள் எனக்கு சுமார் 350 நாட்கள் என் வாழ்வாதாரத்தை சூனியம் மற்றும் கேள்விக்குறியாக்கி மிகுந்த மன ஊளைச்சலை ஏற்படுத்திய காரணத்தால் சமூகம் அவர்கள் உத்தேசிக்கும் நஷ்ட ஈடினை மனுதாரராகிய எனக்கு வழங்க

உத்தரவிடமாறும் இம்மனுவை மிகத் தாழ்மையுடன் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.'' என தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்றநடுவ 12.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

4. மதுரை மாநகராட்சி ஆணையர் தனது கடிதம் எண் மதி/ஈ3/006272/2025 நாள் 30.05.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

> "மனுதாரர் திரு.கார்த்திக் பாபு என்பவரின் பதிவு பெற்ற பொறியாளர் நிலை III உரிமத்தை புதுப்பிக்கக் கோரி இணையதளம் மூலம் விண்ணப்பித்திருந்தார். மேற்படி விண்ணப்பம் இணையதளத்தின் மூலம் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இணையதளத்தில் மனுதாரர் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் அதற்கான Submit option கணினியில் பதிவு செய்ய முற்பட்டபோது Revert option மட்டுமே காண்பித்ததால் மேற்கொண்டு மனுதாரருக்கு உரிமத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க இயலவில்லை.
>
> எனவே இது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்தை தொடர்பு கொண்டு கணினியில் மேற்கண்ட குறைபாட்டை நிவர்த்தி செய்யக் கோரியதைத் தொடர்ந்து தற்போது மேற்கண்ட குறைபாடு சரி செய்யப்பட்டு மனுதாரருக்கு Renewal License for Licensed Registered Professionals License No.MCRE3002 இணையதளம் மூலம் உரிமம் புதுப்பித்து வழங்கப்பட்டுள்ளது (நகல் இணைக்கப்பட்டுள்ளது) என்ற விபரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் மதுரை மாநகராட்சியின் ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தான் மதுரை மாநகராட்சியில் 2019 ஆம் ஆண்டு Registered Engineer Grade-3 (MCRE3002) ஆக பதிவு செய்து இருந்ததாகவும், பதிவை புதுப்பிப்பதற்காக ரூ.5000/– இணையதளம் மூலம் கட்டியதாகவும், ஆனால் 350 நாட்கள் கடந்தும் தனது ரிஜிஸ்டர் இன்ஜினியர் தரம் 3ஐ புதுப்பித்து தரவில்லையென்றும், எனவே தனது மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு ரிஜிஸ்டர் இன்ஜினியர் தரம் 3ஐ புதுப்பிக்க உத்தரவிடுமாறு கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சி ஆணையர் தனது 30.05.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் கோரிக்கை குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்தை தொடர்பு கொண்டு குறை நிவர்த்தி செய்யப்பட்டு, மனுதாரரின் பதிவு பெற்ற பொறியாளர் நிலை III உரிமத்தை புதுப்பித்து மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மதுரை மாநகராட்சி ஆணையரின் மேற்கண்ட அறிக்கையினை ஏற்று, மனுதாரரின் மனு மீது மேல் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M.K. கார்த்திக் பாபு, 23/1, செலுக்கா சுப்பையர் சந்து,
தவிட்டுசந்தை, மதுரை–625 001.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

4) இணை இயக்குநர்/
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

சென்னை–600 032